# குறைமாத சிசுக்களின் வளர்ச்சி வரைபு வழிகாட்டி

**அறிமுகம்**

நிறைமாத சிசுக்களிற்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் வளர்ச்சி வரைபானது 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் தேசிய தாய், சேய் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் குழந்தைகள் வளர்ச்சி விருத்திப் பதிவில் உள்ளடக்கப்பட்டு பிறப்புமுதல் 19 ஆம் வயது வரையான வளர்ச்சினை மதிப்பீடு செய்யப் யன்படுத்தப்படுகிறது. சேவைகளின் தரமேம்பாட்டைத் தொடர் பிறப்புகளின் 5-7 % குறைமாத சிசுக்களாக உள்ளதால் குறைமாத சிசுக்களின் வளர்ச்சி வரைபின் அவசியம் உணரப்பட்டது. எனவே சிசுக்கள் மற்றும் சேய் நலத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் (Tacnch) சிபாரிசுக்கிணங்க, குடும்ப சுகாதார பணியகம் இலங்கை சிறுவர் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து இன்ரகுரொத் 21ஆம் ஆய்வின் மூலம் உருவாக்கப்பட்ட குறைமாத சிசுக்களின் வளர்ச்சி வரைபை தேசிய தாய்,சேய் நல நிகழ்ச்சித்திட்டத்தின் வளர்ச்சி கன்காணிப்புப் பாகத்தில் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்தது.

இன்ரகுரொத் 21 ஆனது 14 கிழமை கர்ப்பம் முதல் இரண்டு வயது வரையான காலத்திலான குழந்தைகளின் வளர்ச்சி,ஆரோக்கியம் ,போஷாக்கு மற்றும் மூளை விருத்தி என்பவற்றை ஆய்வு செய்வதற்கு இங்கிலாந்தின் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஓர் ஆய்வாகும் . அது பின்வரும் எட்டு ஆய்வு மையங்களில் நடாத்தப்பட்டுள்ளது. பிலோட்டாஸ் நகர் (பிரேஸில்), துரின்(இத்தாலி), மஸ்கட்(ஓமான்), ஒக்ஸ்பேட் (இங்கிலாந்து), சீட்டில் (அமெரிக்கா),பிஜிங்கின் சியுனிநாடு (சீனா), மத்திய நக்பூர் (இந்தியா), நைபோபின் தார் (கேன்னியா) தொடர் கண்காணிப்புடனான கருவளர்ச்சி ஆய்வு (FGSLS) ஆனது இன்டகுரொத் 21ம் திட்டத்தின் பிரதான ஓர் பகுதியாகும். இதற்கு ஆரோக்கியமான கர்ப்பிணித்தாய்மார் உள்ளாக்கல் அடிப்படைகளிற்கு அமைவாகத் தெரிவு செய்யப்பட்டு கர்ப்பத்தின் 14 ஆம் வாரத்திற்கு முன்னிருந்து சேர்க்கபட்டு பிறப்பினைத் தொடர்ந்து 2 வயதுவரை கண்காணிக்கப்பட்டனர். இவற்றில் குறைமாதத்தில் (கர்ப்பகாலத்தின் 37 ஆம் கிழமைக்கு குறைவான ) பிறந்த சிசுக்கள் குறைமாத சிசுக்களின் பிறப்பின் பின்னரான தொடர் கண்காணிப்பு ஆய்விற்குள் (PPFS) உட்படுத்தப்பட்டு அவர்களது வளர்ச்சி 2 வயது வரை கண்காணிக்கப்பட்டது. தற்போதுள்ள குறைமாத வளர்ச்சிவரைபு இந்த ஆய்விலிருந்தே (PPFS) பெறப்பட்டது.

**குறைமாத வளர்ச்சி வரைபு**

வளர்ச்சிக் குறிகாட்டிகளை கண்காணிப்பதற்கு தற்போது நான்கு வரைபுகள் உள்ளன.

1. வயதிற்கேற்ப நிறை வரைபு
11. வயதிற்கேற்ப நீள வரைபு
111. நீளத்திற்கேற்ப நிறை வரைபு
1V. வயதிற்கேற்ப தலைச்சுற்றளவு வரைபு

இவ்வரைபுகள் பால் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை. ஆண் குழந்தைகளிற்கான வரைபு நீல நிறத்திலும் பெண் குழந்தைகளிற்கான வரைபு இளஞ்சிவப்பு நிறத்திலும் அச்சிடப்படுகிறது. ஏற்கெனவே CHDR இல் பயன்படுத்தப்படும் நிறைமாத சிசுக்களின் வரைபைப்போன்று குறைமாத வளர்ச்சி வரைபானது 6 மாதகால வயதுவரை மட்டுமே பயன்படுத்தப் படவேண்டும். இதன் பின்னரான காலத்திற்கு சிறுவர் ஆரோக்கிய விருத்திப் பதிவேடு (CHDR) இல் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய வளர்ச்சிவரைபே பயன்படுத்தப்படும்.

இந்த நான்கு வளர்ச்சி வரைபுகளும் இரு தாள்கள் கொண்ட தொகுப்பாக அச்சிடப்படுகின்றது. (ஒரு வரைபு தாளின் ஒரு பக்கத்தில் அமையும் வண்ணம்.) இத்துடன் இத்தாளின் முனைகளில் இருபுறம் ஒட்டக்கூடிய பட்டி இடப்பட்டுள்ளது. எனவே ஒரு குழந்தைக்கு CHDR கொடுக்கப்பட்டவுடன் அதில் காணப்படும் வரைபுகளிற்கு முன்பதாக இக்குறைமாத வரைபு ஒட்டக்கூடிய பட்டியைக் கொண்டு ஒட்டப்பட வேண்டும்.

**ஏற்பாட்டியல்**

இவ்வளர்ச்சி வரைபுகள் அச்சிடுவது குடும்பசுகாதார பணியகத்தின் பொறுப்பாகும். இவ்வரைபுகள் சகல சிகிச்சை நிறுவனங்களிற்கும் (அரச மற்றும் தனியார்) இலவசமாக வழங்கப்படும். எந்த சந்தர்ப்பத்திலும் அவ்வரைபுகளை வழங்குவதற்கு கட்டணம் அறவிடக்கூடாது.

நாடு முழுவதிலுமுள்ள மத்திய அரசின் சிகிச்சை நிறுவனங்களிற்கும் கொழும்பு மாவட்டத்திலுள்ள தனியார் சிகிச்சை நிறுவனங்களுக்கும் குடும்ப சுகாதார பணியகம் நேரடியாக இவ்வரைபுகளை விநியோகிக்கும். மாகாண சபைகளின் கட்டுப்பாட்டிலுள்ள அரச சிகிச்சை நிறுவனங்களிற்கும் தனியான வைத்தியசாலைகளிற்கும் தேவையான வரைபுகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய், சேய் வைத்திய அதிகாரியின் மூலம் விநியோகிக்கப்படும்.

குறிப்பு : எந்த ஒரு சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்திற்கும் இவ் வளர்ச்சி வரைபு விநியோகிகப்படமாட்டாது.

ஏந்தவொரு வைத்தியசாலைக்கும் விநியோகிக்கப்படவேண்டிய வரைபுத்தாள்களின் எண்ணிக்கை அவ்வைத்தியசாலையில் ஆண்டுக்கு பிறக்கும் குறைமாத சிசுக்களின் எண்ணிக்கையைக் கொண்டு தீர்மானிக்கப்படும். இக்கணிப்பின் போது கடந்தவருடத்தில் பிறந்த குறைமாத சிசுக்களின் எண்ணிக்கையைக் கொணடு தீர்மானிக்கப்படும். இக்கணிப்பின் போது கடந்த வருடத்தில் பிறந்த குறைமாதசிசுக்களின் தொகை ( ஆண்,பெண் தனியாக ) கணக்கிடப்பட்டு அதற்கு தாங்கலாக 10% அதிகரித்து கணக்கிடப்படும். ஆண்,பெண் சிசுக்களின் எண்ணிக்கை பாரியளவில் வேறுபடாவிடின் அதனை 50:50 ஆக கருதமுடியும். பால் தனித்துவமான வரைபுகள் தேவைக்கேற்ப விநியோகிக்கப்படும் (ஆண்- நீல நிற வரைபு, பெண்- இளஞ்சிவப்பு நிறவரைபு)

வைத்தியசாலைக்கான CHDR களுக்கான அதிகாரியே (பொது பண்டசாலையின் அதிகாரி) தேவையானளவு குறைமாத வளர்ச்சி வரைபுகளை பெற்று உரிய பிரிவகளிற்கு (PBU, NICU,SCBU) பிறப்பின் பின் வாட்) விநியோகிகக் பொறப்புடையவராவர். சம்பந்தப்பட்ட வைத்தியசாலையின் ஊழியர் தம்மிடமுள்ள இருப்புகளை புதுப்பித்து பற்றாக்குறை ஏற்படாது பார்த்துக்கொள்ள பொறுப்புடையவராவர்.

ஏந்தக் குழந்தைக்கு இந்த குறை மாத வளர்ச்சி வரைபு அவசியம் என்பதை நரம்பியல் வைத்திய நிபுணர்/ சிறுவர் வைத்திய நிபுணர்/ வைத்திய நிபுணரின் அறிவுறுத்தலின் படி வைத்திய அதிகாரி தீர்மானிக்க வேண்டும். சிகிச்சைக்காக சிறுவர் மருத்துவ பராமரிப்பு பிரிவில் அனுமதிக்கப்படும் குறை மாத சிசுக்களிற்கு (கர்ப்ப காலத்தின் 27 கிழமை அல்லது அதிலும் கூடிய வயதுள்ள) ஒரு தொகுப்பு வரைபுகள் அவர்கள் PBU/NICU/SCUB போன்றவற்றில் அனுமதிக்கும் போது வழங்கப்பட வேண்டும். இவ்வாறான விஷேட சிகிச்சையில் அனுமதிக்க அவசியமற்ற குறை மாத சிசுக்களிற்கு அவர்கள் வெளியேறும் போது CHDR உடன் CHDR கொடுக்கும் நேரத்தில் விநியோகிக்கப்பட வேண்டும்.

குறை மாத சிசு வாட்டிலிருந்து வெளியேறும் போது அப்பிரிவின் ஊழியர் அக்குழந்தையின் குறை மாத சிசு வளர்ச்சி வரைபு தொகுப்பு கிடைக்கப்பெற்றதா என்றும் அது சரிவர நிரப்பப்பட்டுள்ளதா என்றும் அது CHDR இன் சரியான இடத்தில் (அதிலுள்ள நிறை மாத சிசுக்களின் வரைபுகளிற்கு முன்) இணைக்கப்பட்டுள்ளதா என்றும் சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும்.

குறை மாத வளர்ச்சி வரைபு தவறவிடப்படும் சந்தர்ப்பத்தில் புதிதான ஒரு வளர்ச்சி வரைபு பிரதியை உரிய வைத்தியசாலையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**குறை மாத வளர்ச்சி வரைபுகளில் பதிவுகளை பராமரித்தல்**

**இனங்கானும் விபரங்கள்**

இந்த வரைபை விநியோகிக்கும் தாதி உத்தியோகத்தர் சிசுவின் அடிப்படை இனங்கானும் விபரங்களை உரிய இடத்தில் நிரப்ப வேண்டும்: முதல் பக்கத்தில் (வயதிற்கேற்ப நிறை வரைபு) - தாயின் பெயர் (குழந்தையின் பெயர் கொடுக்கப்பட்டிருப்பின்), வைத்தியசாலையின் பெயர், வாட்டு/பிரிவு இலக்கம் மற்றும் பிறந்த திகதி, பிறப்பு நேரம், பிறப்பின் போது கர்ப்ப வயது (வளர்ச்சி அளவைகள் - பிறப்பு நிறை, நீளம் மற்றும் தலைச்சுற்றளவு இவை யாவும் உரிய பகுதியில் நிரப்பப்பட்டு உரிய வரைபில் உத்தியோகத்தரால் புள்ளடியிடப்பட வேண்டும்.

**அளவைகளைப் பதிவு செய்தல்**

உரிய பிரிவின் வைத்திய அதிகாரி பிறப்பு நிறை, பிறப்பு நீளம், நீளத்திற்கேற்ப நிறை, பிறப்பின் போதான தலைச்சுற்றளவு என்பவற்றை பிறப்பின் போது கர்ப்ப வயதிற்கேற்ப (கிழமை மற்றும் நாள்) வரைபில் குறிக்க வேண்டும். பிறப்பு தினம் செங்குத்தாக பிறப்பு அளவைகள் குறிக்கப்பட்ட (பிறப்பு நிறை, பிறப்பு நீளம், பிறப்பு தலைச்சுற்றளவு) புள்ளிக்கு நேராக X அச்சில் எழுதப்பட வேண்டும். தொடர்ந்து கண்காணிப்பின் போது எடுக்கப்படும் அளவைகள் ஒவ்வொன்றும் வயது கிழமை மற்றும் நாட்களில் கணிப்பிடப்பட்டு சரியாக குறிக்கப்பட வேண்டும்.

சமுக மட்டத்தில் கு.சு.உ குழந்தையை பதிவு செய்து அக்குழந்தை நரம்பியல் நிபுணராலோ/சிறுவர் மருத்துவ நிபுணராலோ பராமரிக்கப்படுகின்ற போதும் கூட பரிந்துரைக்கப்பட்ட அட்டவணைக்கு அமைவாக வளர்ச்சியை கண்காணிக்க வேண்டும். சமூகத்தில் குழந்தையின் நிறை மற்றும் உயரம் அளவிடப்படும் போது கு.ந.உ உரிய வரைபில் சரியான வயதை கிழமைகள் மற்றும் நாட்களிற்கு கணிப்பிட்டு அதற்கு எதிராக குறித்துக் கொள்ள வேண்டும். உரிய தரவுகள் CHDR இன் B பகுதியிலும் குறிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நிறந்தீட்டப்பட்ட பகுதிகளின் குறியிலக்கம் நிறை மாத சிசுக்களின் வரைபில் பயன்படுத்துவது போன்று பயன்படுத்தப்பட வேண்டும். சிரமமான தலைச்சுற்றளவு அளவீடும் பதிவு செய்தலும் மருத்துவ நிபுணரால் வேண்டப்பட்டாலேயன்றி கு.சு.உ இனால் கிரமமாக செய்யும்படி எதிர்பார்க்கப்படவில்லை. குறை மாத சிசுக்களின் வளர்ச்சி வரைபு குழந்தை வயது 6 மாதம் நிறைவு வரை பயன்படுத்தப்பட வேண்டும். ஆறாம் மாதம் முதல் CHDR இலுள்ள நிறை மாத குழந்தையின் வரைபே பயன்படுத்தப்பட வேண்டும்.

*References:*

Villar J, Papageorghiou AT, Pang R, et al. The likeness of fetal growth and newborn size across non-isolated populations in the INTERGROWTH-21 Project: the Fetal Growth Longitudinal Study and Newborn Cross-Sectional Study. The Lancet Diabetes & endocrinology 2014;**2** (10):781-92doi: 10.1016/S2213-8587(14) 70121-4

Villar J, Cheikh Ismail L, Victora CG, et al. International standards for newborn weight, length, and head circumference by gestational age and sex: the Newborn Cross-Sectional Study of the INTERGROWTH-21st Project. Lancet 2014;**384**(9946):857-68 doi: 10.1016/S0140-6736(14)60932-6

Villar J, Giuliani F, Bhutta ZA, et al. Postnatal growth standards for preterm infants: the Preterm Postnatal Follow-up Study of the INTERGROWTH-21st Project. The Lancet Global Health 2015;**3**(11):e681-e91 doi: http://dx.doi.org/10.1016/S2214-109X(15)00163-1